Youth, Peace & Security

Youth, Peace and Security in Sri Lanka

2017



இளைஞர், சமாதானம் மற்றும் பாதுகாப்பு கூட்டணி – இலங்கை

உறுப்பினர் அமைப்புக்கள்:

World Vision Lanka

Search for Common Ground

Helvetas

United Nations Population Fund (UNFPA)

United Nations Volunteers (UNV)

Open House International

Sri Lanka Unites

International Youth Alliance for Peace

Food and Agriculture Organization of the United Nations (FAO)

Hashtag Generation

Rotaract

United Nations Children's Fund (UNICEF)

WUSC Sri Lanka

இளைஞர், சமாதானம் மற்றும் பாதுகாப்பு அறிக்கை குழு

முக்கிய ஆசிரியர்கள்:

Karim Farishta – Search for Common Ground

Leyla Radjai – United Nations Volunteers

தொகுப்பாளர்கள் / பங்களிப்பாளர்கள்:

Ramzi Deen – Open House International

Thevuni Kotigala – Open House International

Premjit Williams – World Vision Lanka

Lalindra Ranasinghe – World Vision Lanka

Ka Yan Leung – United Nations Population Fund

Bridgette Kennedy – United Nations Population Fund

Takashi Kogoma – United Nations Volunteers

Romeral Ortiz Quintilla – United Nations Volunteers

மொழிபெயர்ப்பாளர் மற்றும் ஆதார வாசகர்கள்:

Renuka Ranganathan – Online UN Volunteer

Patalee Weerasinghe – V-Force Volunteer

Anjali Nawarathne – V-Force Volunteer

Gajithira Puvanendran – Young Peacebuilder

Remo Shihan – CREATE initiative

சிறப்பு நன்றி:

Mr. Lakshitha Saji Prelis – Search for Common Ground

இலங்கையில் இளைஞர், அமைதி மற்றும் பாதுகாப்பு (YPS)

ஆய்வுசுருக்கம்:

இலங்கையின் நான்கு மாகாணங்களில்; அதாவது மேற்கு, கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கில்- முறையே **கொழும்பு, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் மாத்தறையில்**, ஏப்ரில் முதல் ஜூலை 2017 **வரை** நடைப்பெற்ற **இளைஞர்களின் கலந்துரையாடல்கள்** மூலம் **பெற்ற**, இவ் YPS **ஆய்வின் நோக்கம்**: (i) **இலங்கையில் இளைஞர்க** ள் மத்தியில் **சமாதானம்** மற்றும் **பாதுகாப்பும்** பற்றிய விளக்கத்தை அறிந்துகொள்ளுதல்; (ii) **சமாதானத்தை** கட்டியெழுப்பும் **முயற்சிகளில் இளைஞர்கள் எதிர்கொண்ட தடைகள் மற்றும் சவால்களை அடையாளம் காணல்**; **மற்றும்**, (iii) **சமுதாய, தேசிய மற்றும் சர்வதேச** ரீதியில் **இளைஞர்கள் சமாதானத்தை** கட்டியெழுப்பும் **முயற்சியில் முன்னேற**/ மேலும் சிறப்புற **ஒரு சிறப்பான சுற்றுச்சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்**.

இவ் அறிக்கையானது, கலந்துரையாடல்களில் பங்குபற்றிய இளைஞர்களின் கருத்தை பிரதிபலிக்கின்றது.



பொருளடக்கம்

1. **அறிமுகம்** 7

இலங்கையின் மக்கள்தொகை.....7

இலங்கையில் மோதல்கள்·····8

இளைஞர், சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய முன்னேற்ற ஆய்வ···.....10

2. **இலங்கையில் இளைஞர்களுக்கு சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய விளக்கம் என்ன** 12

வன்முறை, போர் மற்றும் மோதல்கள் இல்லாமை 13

ஒற்றுமை 13

நீதி 14

சுதந்திரம் 15

3. **இலங்கையில் சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கான சவால்கள் மற்றும் தடைகள்**..... 16

மொழி தடைகள்.....16

சமுக நெறிகள் மற்றும் கட்டுப்பாடுகள்.....16

தீவிரவாத செய்தி 17

சிறிய இளைஞர் குழுக்களுக்கான அணுகல் இல்லாமை 17

தலை நகரத்தின் உள்ளே மற்றும் வெளியே குழுக்களின் அணுகல் 18

4. **இலங்கையில் சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கான முன்னுரிமைகள் மற்றும் பரிந்துரைகள்**..... 18

சமுகம்:.....18

கலாச்சாரங்களுக்கு இடையிலான பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சி திட்டங்கள் 18

பட்சாதாபம் மற்றும் கருணை.....19

கூட்டாளிகளுக்கிடையில் பிறிவினை வரம் புக்கெதிரான உரையாடல் 19

தலைமுறைகளுக்கிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.....20

தேசியம்:.....20

காணாமல் போன இளைஞர்ககளின் குடும்பங்ளுக்கு இழப்பீடு.....21

முடிவெடுத்தல் பற்றிய அணுகவும், விழிப்புணர்வும**Error! Bookmark not defined.**

தொழில் மற்றும் இணைவிதாண திறன்களை உருவாக்குதல் 21

வெற்றிகரமான உள்ளூர் முயற்சிகளின் அதிகரிப்பு 21

சர்வதேசம்:.....**Error! Bookmark not defined.**

இளைஞர் அவையை சென்றடைதல் மற்றும் நிரூபிக்கப்பட்ட தரவு 22

சர்வதேச சமாதானப்பணியாளர்கள் மற்றும் மத குருமார்களுடன் பணியாற்றுதல்.....22

தடைகளை கடந்து தொடர்புகொள்ளுதல் மற்றும் பின்னூட்ட வழிமுறைகளை உறுதிப்படுத்துதல்.....23

5. **பின் இணைப்பு**..... 24

1. அறிமுகம்:

இளைஞர்களின் ஈடுபாடு இல்லாமல் நீடித்து நிலைக்ககூடிய வளர்ச்சி மற்றும் சமாதானம் சாத்தியம் இல்லை. ஐ.நா.பாதுகாப்பு சபை தீர்மானம் 2250 ன் தழுவல் சமாதான முயற்சி நடவடிக்கைகளில் இளைஞர்களின் முக்கியத்துவத்தை அடையாளம் காணும் வாய்ப்பை விரிவுபடுத்தி மற்றும் உயர்த்திக் காட்டியது; 26 ஆண்டு கால மோதல்களை சந்தித்த நாடான இலங்கை, 2009 ல் உறுதியாக முடிவடைந்ததும், சமாதானத்தையும் இணக்கத்தையும் நிலைநிறுத்த தொடர்ந்தும் முன்னேறி வருகிறது. இலங்கையில், குறிப்பாக இளைஞர்கள், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஒரு கணிசமான பங்கைக் கொண்டுள்ளனர், இதனால் அவர்கள் சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சியில் முக்கிய பங்கை வகிக்க முடியும். இந்த ஆய்வு, இளைஞர்கள் சமாதான முயற்சியில் சந்திக்கும் தடைகள் மற்றும் சவால்களை அடையாளம் காண்பதோடு, சமுதாய, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில், இளைஞர்கள் சமாதானமுறையில் வளரும் ஒரு உகந்த சூழலை உருவாக்குவதற்கு பரிந்துரைக்கிறது.

இலங்கையின் மக்கள்தொகை:

இலங்கை பல்கலாசார நாடாகும். இது பல்வேறு இன மற்றும் மத குழுக்களை கொண்டுள்ளது. அட்டவணை அடிப்படையில், கிட்ட தட்ட 75% மக்கள் சிங்களவர்கள். அதிலும் பெரும்பான்மையினர் பௌத்தர்களாவார். மக்கள் தொகையில் சுமார் 15% தமிழர்கள், அதிலும் பெரும்பான்மையினர் இந்துக்களாகவும் மற்றும் 9% மூர் மக்களில் பெரும்பான்மையாக முஸ்லிம்களாகவும் உள்ளனர்.

இலங்கையில் 2 அதிகாரபூர்வ மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் உள்ளன. சிங்கள மொழியில் 74% மக்கள் பேசுகின்றனர், 18% மக்கள் தமிழ் பேசுகின்றனர். ஆங்கிலம் ஒரு இணைப்பு மொழியாகக் கருதப்படுகிறது; இருப்பினும், இது ஆக 10% மக்களால் மட்டுமே பேசப்படுகிறது.

இலங்கை[1]	
மக்கள் தொகை	22.409,381 (2017 மதிப்பீடு)
இனக்குழுக்கள்	சிங்களம்: 74.9% இலங்கை தமிழ் 11.2%

[1] CIA the World Factbook (https://www.cia.gov/library/publications/the-world-factbook/geos/ce.html)

	இலங்கை மூர்: 9.2% இந்திய தமிழ்: 4.2% மற்றவை: 0.5% (2012 மதிப்பீடு)
மொழிகள்	சிங்கள மொழி (அதிகாரபூர்வ மொழி): 74% தமிழ்: (அதிகாரபூர்வ மொழி): 18% ஆங்கிலம் (இணைப்பு மொழி): 10% மற்றவை: 8%
மதங்கள்	புத்தமதம் (அதிகாரபூர்வம்) 70.2% இந்துமதம்: 12.6% இஸ்லாமிய மதம்: 9.7% ரோமானிய கத்தோலிகர்: 6.1% மற்ற கிருஸ்துவர்கள்: 1.3% மற்றவை: 0.05% (2012 மதிப்பீடு)
வயது கட்டமைப்பு	0-14 வயது: 24.06% 15-24 வயது: 14.63% 25-54 வயது: 41.58% 55-64 வயது: 10.06% 65 வயது மற்றும் அதற்கு மேல்: 9.67% (2017 மதிப்பீடு)

இலங்கையில் மோதல்கள்:

சிலோன்(Ceylon) என அழைக்கப்பட்ட நாடானது போர்த்துகேயர்கள், ஒல்லாந்தர்கள் மற்றும் ஆங்கிலேயர்களால் சுமார் 500 ஆண்டுகளாக காலனித்துவப்படுத்தப்பட்ட பின்னர், 1948 சுதந்திரமடைந்தது. 1972 ஆம் ஆண்டு அதன் பெயர் ஸ்ரீ லங்கா(Sri Lanka) என மாற்றப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னர், 1977 மற்றும் 1987/89 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இரண்டு கிளர்ச்சிகள் ஏற்பட்டன. 1980களின் முற்பகுதி முதல் 2009 வரை ஒரு அழிவுகரமான உள்நாட்டு மோதலும் ஏற்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சியின் போதும், சுதந்திரத்திற்குப் பின்னரும் இன ரீதியான பிரிவினை உடைய அரசியல் மற்றும் பொருளாதார கட்டமைப்பானது பெரும்பாலும் மோதலை பாதிக்கும் முக்கிய காரணியாக கருதப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிந்திய சகாப்தத்தில், தேசிய மொழி மற்றும் தேசிய வேலைவாய்ப்பு மறுசீரமைப்பு மீதும் உள்ள பிரச்சினைகள் வெளிப்பட ஆரம்பித்தன. இதன் விளைவாக எழுந்த தேசியவாத உணர்வு அரசியல் அமைப்பின் மூலம் மேலும் தீவிரபடுத்தப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின், தமிழர்கள், ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் பயனடைந்தனர் என்று நம்பிய சிங்களவர்கள், பாரபட்சமான கொள்கைகளை ஏற்றுக்கொண்டனர். இது 1956 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'சிங்களம் மட்டும் சட்டம்' கொள்கையானது, சிங்கள மொழி மட்டுமே இலங்கையின் அதிகாரபூர்வ மொழியாக மாற்றியது. இதன் காரணாமாக சிங்கள மொழியில் தேர்ச்சி குறைந்த பல தமிழர்கள் தங்களது உத்தியோக நிலையிலிருந்து விலக நேரிட்டது. இக் கொள்கைகள் தமிழ் இளைஞர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பு அடிப்படையில் வாய்ப்புகளை மட்டுப்படுத்தியது .

சிறுபான்மையினர் தமது அடிப்படை உரிமைகளை இழந்த நிலையில், இந்த இன ரீதியான பிரிவினை, அரச கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இலங்கையில் மோதலுக்கு வழிவகுத்தன. காலப்போக்கில் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டாலும், பிரச்சினைகள் தேவையான அளவில் கருத்தில் கொள்ளப்படவில்லை. தனிமைப்படுத்தலையும் பாகுபாடுகளையும் சிறுபான்மையினரால் தொடர்ந்தும் உணரப்பட்டு, இறுதியில் 1975 ஆம் ஆண்டு L.T.T.E (the Liberation Tigers of Tamil Ealam-தமிழ் ஈழ விடுதலை புலிகள்) இயக்கம் உருவானது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தமிழ்ர்களுக்கு ஒரு சுதந்திரமான அரசை பெற்றுகொள்வதற்கான போராட்டத்தை இது மேற்கொண்டு வந்தது. 1983 இல் அரசாங்கத்திற்கு எதிராக எழுந்த கிளர்ச்சிகள், இலங்கையில் நடந்த மோதலின் ஆரம்பமாக இருந்தது. 2009 இல் இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை வென்ற பின் முடிவிற்கு வந்தது.

எனினும் L.T.T.E, சிறுவர் போராழிகளை முன் நிறுத்தி மற்றும் இளைஞர்களை கடுமையாக போரில் ஈடுபடுவதற்கு பயன்படுத்தினர். மேலும் இளைஞர்கள் பலவந்தமாக அல்லது தன்னிச்சையாக இயக்கத்தின் நோக்கை நிறைவேற்ற பணியமர்த்தப்பட்டனர். இதனால் 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னரும், வடக்கில் இளைஞர்கள் சமுதாயத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்டு பாதிப்புக்குள்ளானார்கள்.

L.T.T.E க்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் காலப்பகுதிக்கு இணையாக J.V.P. (Janatha Vimukthi Perumana) என அறியப்படும் கிளர்ச்சியானது சிங்கள இளைஞர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு மோதல் ஏற்பட்டது. பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிகளிலிருந்து பல இளைஞர்கள் கிராமப்புற சமுகங்களை ஒதுக்கி வைத்த சில கொள்கைகளுக்கு எதிராக நிற்க தீவிரமைய மாக்கப்பட்டனர். இந்த விவகாரம் போதுமான அரசியல் தீர்வு இல்லாமல் இராணுவ சக்தியைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தப்பட்டது,

எனவே இந்த சூழ்நிலை இன்னமும் இளைஞர்களின் பாதிப்புத்தன்மையையும் இலகுவில் தடுமாறும் தன்மையையும் பிரதிபலிக்கிறது, இது நாட்டில் இளைஞர்களின்

திறன் மீது எதிர்மறையான கருத்தோட்டத்தை உருவாக்குவதற்கான தளமாக அமைந்தது.

இந்த மோதல்கள் 26 ஆண்டுகள் நீடித்தன,தொடர்ச்சியான முக்கிய சமுதாயதாக்கமாக,போரின் நேரடி இழப்புக்களின் அடிப்படையில் மட்டுமல்லாமல், பொதுமக்கள் கருத்து மற்றும் இளைஞர்களின் மனநிலையையும் மனப்பான்மையையும் கொண்டுள்ளது.

இருப்பினும், இளைஞர்களின் தாக்கம் அவர்களின் வயது மற்றும் அவர்களின் பிராந்தியம் மற்றும் புவியியல் பின்னணியைப் பொறுத்து மாறுபடலாம். வடக்கிலும், கிழக்கிலும் இந்த மோதல்கள் அதிகமாக இருந்ததால், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள இளைஞர்கள் நேரடியாக மோதலில் பாதிக்கப்பட்டிருக்கலாம், அதே சமயம் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள இளைஞர்கள் மோதலின் இதே போன்ற முதல்நிலை அனுபவங்களை பெற்றிருக்க முடியாமல் இருக்கலாம். எனினும், குடும்ப உறுப்பினர்கள் ஈடுபாடு மற்றும் குடும்ப உறுப்பினர்களின் இறப்பு ஆகியவை இளைஞர்களின் மனப்பான்மை மற்றும் கருத்துபாடுகள் ஆகியவற்றை வடிவமைக்கும். மேலும் 2009 இல் மோதல்கள் முடிவடைந்த நிலையில், இன்றைய பின்னணியில் இளைஞர்களில் சிலபோருக்கு பிந்தைய பருவ காலத்தை சேர்ந்தவர்கள் அதனால், அனுபவத்தை நினைவில் வைத்துக் கொள்ளாமல் இருக்கலாம்.

இளைஞர், சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய முன்னேற்ற ஆய்வு:

2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கை; ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்கள், இளைஞர்களை முக்கியத்துவப்படுத்தும் அமைப்புக்கள், நன்கொடையாளர்கள் மற்றும் அரசாங்க பங்குதாரர்கள் ஆகியோர் ஒத்துழைப்பதற்காக UNSCR 2250 தீர்மானத்தை சமுகமயப்படுத்தவும், ஒரு பொதுவான நிகழ்ச்சிநிரல்லை முதன்முறையாக அறிமுகப்படுத்திய நாடுகளில் ஒன்றாகும்இந்த செயல்முறையின் ஒரு படியாக, இரண்டு உத்தியோகபூர்வ தேசிய மொழிகளிலும் (சிங்களம் மற்றும் தமிழ்) தீர்மானத்தை மொழிபெயர்த்ததுடன் UNSCR 2250 யின் ஒரு ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், இந்த தீர்மானம் எடுத்துக்காட்டும் ஐந்து தூண்களின் இளைஞர் இணக்கமான கார்ட்டூன் சித்திரங்கள் மூலம் பரவலாக சமுக ஊடகம் வழியாக விநியோகித்தது[2].

[2] UNFPA Sri Lanka Facebook Page (https://www.facebook.com/unfpa.srilanka/photos/a.445372755494540.107890.248730788492072/1343978315633975/?type=3&theater)Resolution 2250 in Sinhala Language (http://srilanka.unfpa.org/sites/default/files/pub-

அதன்பிறகு, ஐ.நா. அமைப்புகள் மற்றும் சமுக அமைப்புக்கள் (CSOs) கொண்ட வலையமைப்பு ஒன்று இளைஞர், சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய முன்னேற்ற ஆய்வுக்கு (YPS) பங்காற்றுவதற்காக பல இளைஞர் ஆலோசனை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய நிறுவப்பட்டது. YPS வலையமைப்பில் பல ஐ.நா. அமைப்புக்கள் உள்ளன. அவை, UNV, UNFPA, FAO மற்றும் UNICEF, CSO-கள், மற்றும் அபிவிருத்தி அமைப்புக்களான World Vision Lanka, Search for Common Ground, Sri Lanka Unites, Hashtag Generation, International Youth Alliance for Peace, Rotaract, Open House International, Helvetas and WUSC Sri Lanka ஆகும். ஆரம்ப கலந்துரையாடல்கள் World Vision Lanka, Search for Common Ground மற்றும் Helvetas ஆகியவற்றால் ஆலோசனை செயல்முறைக்கான வலையமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்பகட்ட தீர்மானம் செய்யப்பட்டது. வலையமைப்பில் உள்ள நிர்வாக பிரதிநிதிகள், ஆலோசனை செயல்முறையை திட்டமிடவும் மற்றும் ஆலோசனை திட்டங்களை 4 அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களில் நடாத்தவும், பல கூட்டங்கள் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடத்தினர். ஆலோசனைக் கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டது. முன்னர் குறிப்பிடப்பட்ட வலையமைப்பில் உள்ள அமைப்புக்களுடனான ஆலோசனைகளுடன் Search for Common Ground மற்றும் UNV மூலம் முன்னேற்ற ஆய்வு அறிக்கை உருவாக்கப்பட்டது.

ஏப்ரல் முதல் ஜூலை 2017 வரை இலங்கையில் மேற்கு, கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு போன்ற 4 மாவட்டங்களில்; அதாவது, கொழும்பு, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் மாத்தறையில் ஆலோசனைகள்

வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள இளைஞர்களுக்கிடையே உள்ள மொழித்தடைகளையும், அவர்களின் வெவ்வேறு முன்னோக்குகள் மற்றும் வாழ்வாதார அனுபவங்களையும் கருத்தில் கொண்டு, சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் உள்ள தொடர்பை கலந்துரையாட இளைஞர்களுக்கு ஒரு வசதியான மற்றும் பாதுகாப்பான சூழலை வழங்குவதற்காக, YPS வலையமைப்பு, ஒரு தேசிய ஆலோசனையல்லாமல் மாகாணமட்டத்திலான ஆலோசனைகளை மேற்கொள்ள தீர்மானித்தது. ஒவ்வொரு நிறுவனத்தினதும் நிதி மற்றும் வளங்களின் கட்டுப்பாடு காரணமாக, ஆலோசனைகளை 4 முறை மட்டுமே நடைப்பெற்றது. இந்த ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட மாதிரி இலங்கையின் ஒட்டுமொத்த இளைஞர் முன்னோக்கின் பிரதிநிதிகளாக இல்லாவிட்டாலும், இலங்கையில் சமாதானமுயற்சிகளில் இளைஞர்களின் தற்போதைய

pdf/United%20Nations%20RESOLUTION%202250_SINHALA%20%281%29_0.pdf)Resolution 2250 in Tamil Language (http://srilanka.unfpa.org/sites/default/files/pub-pdf/2250%20Tamil%20Translation%20_0.pdf)

சூழ்நிலையைப் பற்றிய புரிதலை உருவாக்குவதன் மூலம் இந்த ஆய்வு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆய்வில் உள்ள இளைஞர் பங்கேற்பாளர்கள் முதன்மையாக YPS வலையமைப்பு மூலம் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் பங்கேற்பாளர்கள் 18 முதல் 28 வயதிற்குட்பட்டவர்களாவர், பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கையை சமநிலையாக பராமரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் உள்ள ஆலோசனைகளின் விபரங்கள் பின்வருமாறு:

கொழும்பு	
அமைப்பாளர்கள்	Search for Common Ground, UNFPA, World Vision, Sri Lanka Unites, UNV தேடல்
திகதி	ஏப்ரல் 19-20, 2017
பங்கேற்பாளர் எண்ணிக்கை	24
இடையீட்டாளர்கள் எண்ணிக்கை	4
மொழி	ஆங்கிலம்
மட்டக்களப்பு	
அமைப்பாளர்கள்	International Youth Alliance for Peace, World Vision Lanka
திகதி	மே 27-28, 2017
பங்கேற்பாளர் எண்ணிக்கை	28
இடையீட்டாளர்கள் எண்ணிக்கை	4
மொழி	தமிழ்

கிளிநொச்சி	
அமைப்பாளர்கள்	Helvetas, Sri Lanka Unites
திகதி	ஏப்ரல் 24, 2017
பங்கேற்பாளர் எண்ணிக்கை	21
இடையீட்டாளர்கள் எண்ணிக்கை	4
மொழி	தமிழ்

மாத்தறை	
அமைப்பாளர்கள்	Open House International, Search for Common Ground, UNV, FAO
திகதி	ஜூலை 8-9, 2017
பங்கேற்பாளர் எண்ணிக்கை	15
இடையீட்டாளர்கள் எண்ணிக்கை	3
மொழி	சிங்களம்

2. **இலங்கையில் இளைஞர்களுக்கு சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய விளக்கம் என்ன?**

கலந்தாலோசனையின் போது இளைஞர்களிடம், “உங்களுக்கு சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்றால் என்ன?” மற்றும் ”உங்களுக்கு மிக முக்கியமான சமாதானம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் யாவை?” என்பது போன்ற சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய கேள்விகள் கேட்கப்பட்டன. ’சமாதானம் மற்றும் பாதுகாப்பு’ என்ற கருத்து மிகவும் பரந்தளவில் தனிநபர்களின் வாழ்க்கையின் பல அம்சங்கள், அவர்களின் பின்னணி, அவர்களின் பூர்வீக வரலாறு, வயது, பாலினம், இனம், மற்றும் வரையறுக்கும் நபரின் மதம் ஆகியவற்றைப் பொறுத்து இருக்கும்.

கலந்தாலோசனையில் அவர்களின் பதில்களை பகுப்பாய்வு செய்ததில், இலங்கையில் இளைஞர்களுக்கான 'சமாதானம் மற்றும் பாதுகாப்பு' என்ற கருத்து தொடர்பாக நான்கு பிரதான கருப்பொருள்கள் வெளிவந்தன. அவை, 'வன்முறை இல்லாமை, போர் மற்றும் மோதல்கள்', 'ஒற்றுமை', 'நீதி' மற்றும் 'சுதந்திரம்' ஆகியவையாகும்.

வன்முறை, போர் மற்றும் மோதல்கள் இல்லாமை:

> *" வன்முறை, போர் மற்றும் மோதல் இல்லாத சூழலில் சமாதானம் இருக்கும்."*
>
> *"சமாதானம் என்பது இனம், மொழி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் மோதல்/பிரிவினை இல்லாமல், ஒவ்வொரு நபரும் தங்கள் கருத்து மற்றும் நடவடிக்கைகளை சமமாக வெளிப்படுத்தும் உரிமையை பெறுவதில் தான் உள்ளது."*
>
> *"மோதல்கள் நடைபெறாமல் மற்றும் மன நிம்மதி இருக்கும் இடத்தில் சமாதானம் இருக்கும்."*

இலங்கையில் 26 வருடகால உள்நாட்டு மோதல்களுக்கு பின்னர் 'வன்முறை, போர் மற்றும் முரண்பாடு இல்லாமை', அதாவது 'எதிர்மறை சமாதானம்' [3] என அழைக்கப்படுவது, 2009 ஆம் போராட்டத்தின் முடிவின் பின் அடையப்பட்டது. எனினும், போராட்டத்தின் தாக்கம் இன்னும் பல வழிகளில் எஞ்சியுள்ளன. கடந்த 30 ஆண்டுகளாக வளர்ந்து வரும் இலங்கை இளைஞர்கள் பலர் 2009 இல் இருந்தே யுத்தமற்ற வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். சிலருக்கு, 'போராட்டம் இல்லாமை' என்று குறிப்பிடுகையில், போராட்டத்தின் நினைவு,அவர்களின் மனதில் இன்னமும் புதியதாக இருக்கலாம். வன்முறை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது அவர்களுக்கு சமாதானமாக தோன்றலாம்.

ஒற்றுமை:

> *" ஒரு பல்கலாசார சமுதாயத்தில், அனைத்து இனம், மதம், மொழிகளுக்கும் மரியாதை உடன் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு"*

இலங்கையில் 26 வருடகால போராட்டம் ஒரு இன மோதலாக பெரும்பாலும் விவரிக்கப்படுகிறது. இது இளைஞர்களுக்கு போரின் நேரடி விளைவுகள் ஏற்பட்டது மட்டுமல்லாமல், அவர்களின் மனப்பான்மை மற்றும் தனித்துவமும் காலப்போக்கில் எவ்வாறு அவர்களை உருவாகியுள்ளது என்பது பற்றியாகும். தேசிய இளைஞர் ஆய்வு 2013 இல், இளைஞர் பங்கேற்பாளர்கள், இன அடையாளம் மீது ஒரு வலுவான விழிப்புணர்வைக் காட்டினர், அதில் 46 சதவீதமானோர் மோதலுக்குப் பின்னர் தங்கள் இன அடையாளத்தில் தீவிரமடைந்தனர் என்று பதிலளித்தனர்[4].

> *"சமாதானத்தை அடைவதற்கு சமுகமய செயல்முறை முக்கியம். பல்வேறு கலாச்சாரங்களை புரிந்து கொள்வது முக்கியம். இலங்கையில், மொழி தான் முக்கிய தடையாகும் மற்ற கலாச்சாரங்களைப் புரிந்து கொள்வதல்ல. "*

இலங்கையைப் போன்ற ஒரு பன்முக கலாச்சார நாட்டில், பல்வேறு இனக்குழுக்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் மரியாதை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என அடையாளம் காணப்பட்டது. தொடர்பாடல் அவசியம்; இருப்பினும், நாட்டில் பல இடங்களில் மொழி இன்னமும் பிரச்சினையாக உள்ளது.

---

[3] The absence of violence, war and conflict is what Galtung (1964), the pioneer of peace studies, calls 'negative peace.' Galtung, J. (1964). An Editorial. *Journal of Peace Research*, 1 (1), 1-4 (வன்முறை, போர் மற்றும் மோதல்கள் இல்லாததால் சமாதானம் படிப்புகளின் முன்னோடி எது Galtung (1964), 'எதிர்மறை சமாதானத்தை' குறிக்கிறது. Galtung, J. (1964). An Editorial. Journal of Peace Research, 1 (1), 1-4)

[4] UNDP (United Nations Development Programme). (2014). Youth and Development. *Sri Lanka National Human Development Report*. 83-96.

ஒவ்வொரு இனமும் வெவ்வேறு மொழியில் பேசுகின்றன, பெரும்பாலான இளைஞர்கள் இன்னும் ஒரு மொழி யில் மட்டுமே பேசுகின்றனர். மொழி ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும், கலந்துரையாடுவதற்கும் ஒரு கருவியாகும்; இருப்பினும், பொதுவான மொழி இல்லாமல், பரஸ்பர புரிதல் கடினமாக இருக்கும். ஆங்கில மொழி 'இணைப்பு மொழி' என்று அறியப்படுகிறது; இருப்பினும், இது மக்கள் தொகையில் சுமார் 10% மட்டுமே பேசகின்றனர். ஆகையால், பல்வேறு இன குழுக்களில் சமுக பங்கேற்பு, கூட்டுறவு மற்றும் கூட்டாண்மை வாய்ப்பு ஆகியவை தடையாக உள்ளது.

> *"நான் ஒரு முறை, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்த வந்த மாணவர்களுடன் ஒரு முகாமில் கலந்துகொண்டேன். இதில் 6 நாட்கள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் பேசும் தமிழ் மாணவர்களுடன் இருந்தேன். அப்போது அவர்கள், "எங்கள் இனக்குழுவில், சிங்களவர்கள், ராணுவ வீரர்களுடன் மட்டும் தான் ஈடுபட்டனர் ... அவர்கள் எங்களை பற்றி வேறுபட்ட கருத்தை கொண்டிருந்தனர். ... பல்வேறு இன குழுக்களிடையே வலையமைப்புக்குகள் மற்றும் தொடர்புகளை அதிகரிக்க வேண்டும்"* என்று கூறினர்.

நீதி

> *"நீதி அமைப்பின் பலம் மக்களுக்கு இடையில் மோதலைக் குறைத்து, சமாதானம் என்று அழைக்கப்படும் ஒரு சூழ்நிலையை உருவாக்க உதவுகிறது"*
>
> *"சமாதானம், வளங்களையும் நன்மையையும் சமமாக அளிப்பதாகும்"*

நீதி, சமத்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவை சமாதானம் மற்றும் பாதுகாப்பின் அதிகபட்ச அம்சங்களாக இருக்கின்றன. நீதி என்பதில் மோதலின் போது பொதுமக்கள் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொடூரமான சம்பவங்களை ஒப்புக்கொன்று பொறுப்பை எடுத்துக் கொள்ளுதல் மற்றும் பல்வேறு இன குழுக்களுக்கும் பாலின உறவுகளுக்கும் இடையில் சமத்துவம் மற்றும் சமபங்கு ஆகியவற்றை ஊக்குவித்தல் என்பன அடங்கும். இது அனைத்து தனிநபர்களின் மனித உரிமையை பாதுகாக்க உதவுகிறது. சமுதாயத்தில் நீதி இல்லாவிட்டால் உண்மையான ஒற்றுமை இருக்காது என்று இளைஞர்கள் கூறினர்.

> *"வடக்கில் பெரும்பாலோர், காணாமல் போன தங்கள் குடும்பங்களுக்கு என்ன நடந்தது என்று தெரிய விரும்புகின்றனர்."*

காணாமல் போனோர்[5] குடும்பத்தினர், ~~மேலும்~~ பிரியமானவர்களைப் பற்றி ஒரு பதில், நீதி மற்றும் அவர்களை பற்றி உண்மையை அறிய காத்துக்கொண்டிருக்கின்றனர். பதில் பெறாமல் அவர்களுக்கு மனநிம்மதி இல்லை.

சுதந்திரம்:

> "சமாதானத்தின் அடிப்படையானது, தனிநபர்கள் தங்களது சொந்த தேவைகளைத் பெற்று, தங்களை வரையறுத்து, பேச்சு சுதந்திரத்தை அனுபவிக்கும் திறனைப் பேணி பாதுகாப்பது ஆகும்."
>
> " சமாதானம் என்பது, இனம், மொழி, மதம் ஆகியவற்றின் அடிப்படையிலான போராட்டம் / பிரிவு இல்லாமை மற்றும் ஒவ்வொரு நபரும் தங்கள் கருத்து மற்றும் நடவடிக்கைகளை சமமாக வெளிப்படுத்தும் திறன் மற்றும் உரிமையைக் பெறுவதாகும்."

இளைஞர்கள் , 'சுதந்திரம்' என்பது அவர்கள் வாழும் சமுகத்தில் தமது தேவைகளை நிறைவேற்றும் வாய்ப்பையும் திறமையையும் என அடையாளம் காண்கின்றனர். ஒரு சமுதாயத்தில் சுதந்திரமாக இருப்பதற்கு தரமான கல்வி, வேலை வாய்ப்புகள் மற்றும் ஜனநாயகம் வேண்டும். மேலும், அவர்களின் எண்ணங்களை எதிரொலித்து, பிரதிபலித்து, மற்றும் பொது துறைகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை வேண்டும். கொள்கை உருவாக் கம் உட்பட பல்வேறு விடையங்களில் தங்கள் விருப்பம் போல் சுதந்திரமாக பங்கேற்க மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

3. இலங்கையில் சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கான சவால்கள் மற்றும் தடைகள்

மொழி தடைகள்:

உள்வாங்கப்பட்ட (inclusive youth peacebuilding efforts) இளைஞர் சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு பெருவாரியாக மற்றும் மிகவும் பரவலான இடையூராக மொழி தடை அமைகின்றது. தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் இருந்து முதன்மையாக/ பிரதானமாக சிங்களம் பேசும் இளைஞர்கள், மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து பிரதானமாக தமிழ் பேசும் இளைஞர்கள் சில நேரங்களில் ஒருவருக்கொருவர் தொடர்பாடலை மேற்கொள்ள கடினமாக உள்ளது. ஆங்கிலம் சில நேரங்களில் பொது மொழியாகும், ஆனால் இளைஞர்க ளுக்கு ஆங்கிலத்தில் உரையா டும் ஆற்றல் அவர்கள் பெற்ற கல்வி மட்டத்தினால் தீர்மானிக்கப்படுகிறது. மேலும்,

[5] மோதலில் இலங்கையின் பாதுகாப்புப் படைகளால் கடத்தி வைக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோரை காணாவில்லை.

தேசிய மொழி கொள்கைகள்[6] ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படவில்லை மற்றும் வாய்ப்பு விநியோகம் பாரபட்சமாக உள்ளது.

பெரும்பாலும் கிராமப்புறப் பள்ளிகள் கற்பித்தல் தரங்களை பேணுவதற்கு தேவையான வசதிகள் குறைந்தளவில் காணப்படுகின்றன. வகுப்பறைகள், கட்டிடங்கள், நூலக வசதிகள், உரைநடை புத்தகங்கள் போன்றவை உட்பட மனித வளமும் தொடர்ந்து பிரச்சனையாக இருக்கும் பட்சத்தில், சில பள்ளிகளில் மொத்தமாக 4-5 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இந்த சூழ்நிலை ஆசிரியரின் திறமையை சவால் செய்வது மட்டுமல்லாமல், ஒரு குறிப்பிட்ட பாடத்தை கற்பிப்பதற்கு ஆசிரியரின் தகுதியைப் பாராட்டுவதில்லை.

சமுக நெறிகள் மற்றும் கட்டுப்பாடுகள்:

கலாச்சார பாரம்பரியங்கள் இன்னமும் இளைஞர்களுக்கு தங்கள் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதோடு சமுகத்தில் பங்கேற்பதற்கான உணர்திறன் இடர்களைத் தருகின்றன. நீண்ட காலமாக பற்றி இருக்கப்படும்(long held social norms) சமுக நெறிகள் மற்றும் கட்டுப்பாடுகள் இளைஞர்களின் பங்களிப்பை பொதுமைப்படுத்தி, சமுக மாற்றத்திற்கான ஒரு சமுகத்தை வழிநடத்தும் வாய்ப்பை வழங்குவதற்கு முன்னர் அவர்களை ஒரே மாதிரியாகக் கொள்கிறது. உதாரணமாக, இளைஞர்களின் பிரபலமான கலாச்சார

குறிப்புகள் அவர்கள் அந்தந்த சூழல்களில் எவ்வாறு காணப்படுகின்றனர் என்பதைக் காட்டுகிறது. பொதுவாக ஊடகங்களில் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் அவர்களை செயலின்றி இருப்பவர்களாகவும், பொறுப்பற்றவர்களாகவும், பலவாராக சித்தரிக்கிறது. இந்த முத்திரை இளைஞர்கள் தங்களால் என்ன செய்ய முடியும் என்பதை காண்பிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதில்லை. மேலும், இந்த நாணயமற்ற முன்கருத்துக்களை கையாளும் திறன் குறைவாக உள்ளது, எனவே இளைஞர்கள் தொடர்ந்தும் நீக்கப்பட்டு மற்றும் கண்துடைக்கப்படுகின்றனர். இளைஞர்கள் தங்கள் மனக்குறைகளையும் பிரச்சினைகளையும் சட்டவல்லுனர்களிடம் எடுத்துச் செல்லும் போது, அவர்களின் கவலைகளுக்கு உரிய கவனம் அளிக்கப்படுவதில்லை. இளைஞர்கள் இனி 'எதிர்காலத் தலைவர்கள்' என கருதப்படாமல் இருக்கும் வரை, மற்றும் அவர்களின் கருத்துக்கள் 'இன்றைய தலைவர்கள்' என மதிப்பளிக்கும் வரை, இந்த முரண்பாடை சூழ்ந்துள்ள பொதுவான சமுகத்தின் அபிப்ராயங்களை மாற்றுதல் ஒரு சவாலாக அமையும். இளைஞர்கள் இன்னும் சமாதானம் பாதுகாப்பை சுற்றியுள்ள நிலையற்ற சூழலால்,

[6] சிங்கள மொழிக்கு மிகப்பெரிய நிதியுதவி உள்ளது, இரு மொழிகளும் (சிங்களம், தமிழ்) தேசிய மொழிகளாக இருந்தாலும், அவை எப்போதும் இணையாக பயன்படுத்தப்படுவதில்லை.

அவர்களது கருத்துக்களைப் வெளிப்படுத்துவது உடல், உணர்ச்சி மற்றும் சமுக அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் என்றும், அவர்களது பாதுகாப்பிற்கு போதுமான உத்தரவாதம் இல்லையென்றும் எண்ணுகின்றனர்.

தீவிரவாத செய்தி:

தீவிரவாதக் குழுக்கள் மற்றும் அவர்களின் செய்தி பரவலாக இருப்பதோடு, ஓரளவிற்கு, அவர்களது கொள்கைக்கு வரவேற்பதன் மூலம் பாதிக்கப்பட்ட இளைஞர்களை அடைந்து, பிற பிரிவினையுடன் இணைப்பை உருவாக்கி, இளைஞர்களை மாற்று வழிகளில் ஈடுபடுவதை பற்றி சிந்திப்பதிலிருந்தும் பெறுவதிலிருந்தும் தனிமைப்படுத்துகின்றனர். சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பற்றிய கருத்துக்கள் இளைஞர்களுக்கு திணிக்கப்பட்டு, தாமாகவே அவற்றைப் புரிந்து கொண்டும் அவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதற்கான வாய்ப்பும் அளிக்கப்படுவதில்லை. பொருளாதார வளங்கள் மற்றும் கலந்துரையாடுவதற்கான தளங்கள் வரையறுக்கப்பட்டு அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக இளைஞர்கள் விலகுதல் அல்லது உரையாடலில் அவர்களின் பங்கை புரிந்துகொள்வதற்கான ஆக்கபூர்வமான வழிகளில் ஈடுபட முடியாமல் போகின்றது. இங்கே, தனியார் மற்றும் பொது ஊடகங்கள் வன்முறையான விவரிப்புகளை சமாதானமானகவும் ஆதரவானதாகவும் மாற்றுவதற்கு ஒரு பயனுள்ள மற்றும் வலு வாய்ந்த பாத்திரத்தை கொண்டுள்ளன, ஆனால் அத்தகைய மாற்றங்களை செய்வதற்கான முயற்சிகள் அரசியல் பிரமுகர்களின் நிகழ்ச்சித் திட்டங்களால் கடுமையாக பாதிக்கப்படுகின்றன:—பலதரப்பட்ட தகவல்களின் அணுகல் இல்லாததால் சமுக குழுக்களிடையே பதற்றம் அதிகரித்து, சமுக ஒற்றுமையை அச்சுறுத்துவதாக நம்பப்படுகிறது.

சிறிய இளைஞர் குழுக்களுக்கான அணுகல் இல்லாமை:

பெரிய நிறுவனங்கள் நிதி தவறாக பயன்படுத்துவது அல்லது தவறாக ஒதுக்கீடு செய்வதாக கூட இருந்தாலும், சிறிய மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட இளைஞர் அமைப்புக்களுக்கு, நிதி மற்றும் வளங்களை ஒருங்கிணைப்பது கடினம். இளைய நிறுவனங்கள் பெரிய திட்டங்களில் ஈடுபட வாய்ப்புகள் கிடைப்பதில்லை, குறைந்த அடையாளமும் அங்கீகாரமும் பெறுகின்ற அதேவேளை அவற்றின் மதிப்பை மற்றைய பல அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் மூடுகைக்குள் குறுகித்துக்கொள்கின்றதோடு, இந்நிலையை சரி செய்யவும் முயற்சிக்கின்றனர். இதன் விளைவாக, இளைஞர் சமுக ஈடுபாடு பிரித்தெடுக்கப்படுவதோடு, அதே அல்லது அதேபோன்ற இளைஞர் குழு செயற்பாடுகளில் ஈடுபட்டாலும், குறிப்பிடத்தக்க பங்கு ஒதிக்கிவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இளம் தலைவர்கள் ஆதிக்கம் செலுத்தும் அமைப்புக்களுக்குள் தலைமை பதவிக்கு எழுவதற்கு குரல் கொடுப்பதில் இளம் பெண் தலைவர்கள் சவால்களை சந்திக்கின்றனர்.

தலை நகரத்தின் உள்ளே மற்றும் வெளியே குழுக்களின் அணுகல்:

கொழும்பு மற்றும் பிற இடங்களுக்கு இடையில் உள்ள முக்கிய அடித்தள பிளவு, நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கும் நகர்ப்புற இளைஞர்களுக்குப் பொருந்தக்கூடிய பிரச்சினைகள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றிற்கு இடையே ஒரு தெளிவான தொடர்பின்மையை இப்பிளவு நிரூபிக்கிறது. இது பல்வேறு மொழிகள், சாதிகள், மதங்கள், மற்றும் இனக்குழுக்கள் ஆகியவற்றின் விளைவாக இருக்கலாம். இவ் வேறுபாடுகளை அங்கீகரிக்காமல், ஒதுக்கப்பட்ட குழுக்கள் தீர்மானங்களின் கலந்துரையாடல்களில் இருந்து நீக்கப்படுவதும், இதனால் அவர்களது நலன்கள் பெரும்பாலான சூழ்நிலைகளில் பிரதிபலிக்காமல், பாதுகாக்கப்படாமல் இருப்பதற்கான நிலைமையும் காணப்படுகின்றது.

4. இலங்கையில் சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கான முன்னுரிமைகள் மற்றும் பரிந்துரைகள்:

வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் உள்ள இளைஞர்களிடம் இருந்து சமுகம், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில், ஆட்சி பற்றிய தங்கள் பரிந்துரைகளை வழங்கினர்.

சமுகம்:

கலாச்சாரங்களுக்கு இடையிலான பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சி திட்டங்கள்:

இளைஞர் தலைமையிலான அல்லது இளைஞர்களை நோக்கிய திட்டங்கள், கலாச்சாரங்களுக்கு இடையிலான பரிமாற்றங்களை ஊக்குவித்து, இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கு அவர்களின் குடியுரிமைகளை தெரிவித்து, சமாதானம் மற்றும் பாதுகாப்பு கருத்துப்பாட்டை எவ்வாறு வடிவமைப்பதென்பதையும் தெரிவிக்க வேண்டும். புவியியல், இன, மொழி வேறுபாடு இருந்தாலும், இளைஞர்களுக்கிடையில் உரிமைகள் மற்றும் குடியுரிமை பொறுப்புகளை பகிர்வு செய்வதன் மூலம் அவர்களின் மதிப்பு மற்றும் தகுதியை அறிவதற்காக இளைஞர்களை அணிதிரட்ட முடியும். இது

பெரும்பாலும், சம வயதுடையவர்கள் மற்றும் ஒத்த கருத்துடையவர்களிடையே அறிவாற்றலை விரைவாக பரவ உதவும்.

தேசிய உரையாடலில் நலிவடந்து வரும் நன்னெறி சார் தலைமைத்துவம் மற்றும் தார்மீக கோட்பாடுகளை, இளைஞர் பயிற்சி திட்டங்கள் மூலம் மேம்படுத்த முடியும். ஒரு நல்ல, பொறுப்புணர்வுமிக்க, மற்றும் நேர்மையான தலைவர் பற்றிய விளக்கம் சார்ந்த உரையாடல் மேலும் தேவைப்படுகிறது. பயிற்சி பட்டரைகள் மற்றும் பிரச்சாரங்கள் மூலம், உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச தலைவர்கள் பற்றி இளைஞர்களுக்கு தெரிவித்து, இளைஞர்கள் தலைமையிலான நடவடிக்கைகள், வீடுகள், பள்ளிகள், மற்றும் பொது போக்குவரத்து போன்ற இடங்களில் எவ்வாறு அமையும் என்பது பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கலாம்

பட்சாதாபம் மற்றும் கருணை:

பட்சாதாபம் மற்றும் கருணையின் தோற்றம் சமுகம் மட்டத்தில் தொடங்குகிறது. இது மற்ற, இளைஞர்கள், வயது வந்தவர்கள் மற்றும் ஏனைய சமுக அங்கத்தவர்களின் பங்கை முறையாக அங்கீகரிப்பதுடன் ஆரம்பமாகின்றது. இலங்கை அதன் ஆழமாக பிளவுபட்ட கடந்த காலங்களில் இருந்து நல்லிணக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், ஒருவருக்கொருவர் கிரகிப்புடன் புரிந்துணர்வு கொள்வதுடன், மற்றவர்களின் கருத்துகளை மதிப்பீடு செய்வது அதிக வளர்ச்சிக்கு உதவும். இது பல்வேறு பங்குதாரர்களின் பங்கேற்பை எளிதாக்குவதுடன், எண்ண பகிர்வை ஊக்குவிப்பதோடு சமுக ஒருங்கிணைப்புகளை மேம்படுத்தும்.

கூட்டாளிகளுக்கிடையில் பிறிவினை வரம் புக்கெதிரான உரையாடல் :

இளைஞர் வலையமைப்புக்கள், அறிவு பகிர்வு தளங்களை உருவாக்குவதோடு நாட்டிலுள்ள பல்வகைமைத்தன்மைக்கு மற்ற இளைஞர்களை அறிமுகப்படுத்துகின்றது. பயத்துடன் அல்லது தவறான கருத்தோட்டத்துடன் செயல்படுவதற்கு பதிலாக/மாறாக, மத நடைமுறைகள், உணவு பழக்கங்கள், வெவ்வேறு மொழிகளில் உள்ள முக்கிய சொற்றொடர்கள் போன்றவற்றைப் பற்றிய தகவலை இளைஞர்கள் பகிர்ந்து கொள்ள முடியும். பரஸ்பர புரிதல், மோதல்கள் மற்றும் வன்முறை நடவடிக்கைகளை பெருமளவில் தடுக்க உதவுகிறது. இளைஞர்களை வலுவூட்டலுக்கான பங்குரிமை/ கூட்டாண்மை வய்ப்புக்களை இணங்காணலாம்

தலைமுறைகளுக்கிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்புதல்:

தலைமுறையினர்களுக்கிடையிலான கருத்து பரிமாற்றங்கள் மற்றும் சிந்தனைகள், சிரேஷ்ட குடிமக்கள் மற்றும் பொதுமக்களின் அபிப்ராயங்களை மாற்றுவதற்கு முக்கியமாகும். இலங்கையின் சூழல் முறைமை பெரியவர்களுக்கு அதிகாரம் மற்றும் ஆணையுரிமையை கொடுத்துள்ளதோடு, அதிக பட்சம் அவர்களது அங்கீகாரம் சமுகம் சார் திட்டங்களை செயல்படுத்த/தடுக்க காரணமாகின்றது. இளைஞர்கள் பெரியவர்களின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டுகொள்கிறதோடு இளைஞர்களால் நடவடிக்கை எடுக்கக்கூடிய புதிய வழிகளைப் பற்றி அவர்களுக்கு தெரிவிக்கவும் விரும்புகிறார்கள். இளைஞர்கள் ஈடுபாடு பற்றி பெரியவர்களிடமிருந்து வரும் எதிர்ப்பு பெரும்பாலும் தலைமுறை வயதெல்லை சர்ந்த் நீண்டகால சமுக நெறிகளின் பின்பற்ருகையகும். இளைஞர்களின் பங்கு பற்றி தவறான மனோபாவம் சமூகம்சார் அடித்தள வேலைத்திட்டங்களை ஆர்ம்பிக்கும் முன்னர் சரியாகத் தீர்க்கப்பட வேண்டும்.

இளைஞர்கள் சமுக வலைத்தளங்களை பரிபூரணமாக பயன்படுத்தி எவ்வாறு சமாதான முயற்சியை அதிக அளவில் சமுகத்தின் எட்டாத பகுதிகளுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று அறிவூட்டப்பட வேண்டும்.

தேசியம்:

கல்வி அமைச்சகம் முன்னுரிமை கொடுக்க வேண்டியவை:

(1) கேலித்தனம், ஒதிக்கிவைத்தல், புறக்கணிப்பு, மனத் தளர்ச்சி போன்ற பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பதைப் பற்றி ஆசிரியர்களுக்கு கற்பிப்பதற்காக ஆசிரியர் மற்றும் ஆலோசகருக்கான உணர்திறன் பயிற்சிகளும் நடைபெற வேண்டும். இப்படிப்பட்ட முக்கியமான உணர்திறன்களுக்கு ஆசிரியர்களை பொறுப்பாக்கும் இயக்கமைப்பு முறைகளை வலய மற்றும் மாகாண கல்வித் தலைவர்களிடமிருந்து ஏற்படுத்த வேண்டும்.

(2) பாடசாலை மற்றும் வகுப்பறைகளில் பல்லின பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டின் உத்தரவாதம். - முக்கியமாக எத்தனையோ இனக்குழுக்களுடன் தொடர்புடைய பெரும்பான்மையான பகுதிகளானது சிறுபான்மையினரை ஒதுக்கிவைத்திருக்கின்றன அல்லது குறைவான வசதிகள் கொண்ட வகுப்பறைகள் இணையாக வழங்கப்படுகின்றன.

(3) பின்தங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகை - இது அவர்களுக்கு பலவகை ப்பட்ட கற்றல் சூழல்களுக்கு அதிகமான அணுகலை அளிப்பதோடு மற்ற மத, இன மாணவர்களை சந்திப்பதற்கும் ஒருங்கிணைவதற்கும் உதவுகிறது.

(4)வெறுக்கத்தக்க பேச்சு உள்ளடக்கத்திற்கான பூரண நிகர் சகிப்புத்தன்மை கொள்கை. - கடந்த கால நிகழ்வுகள் பற்றிய மாணவர்களின் முழு புரிதலுக்கு பாரபட்சமான உள்ளடக்கம், குறிப்பாக வரலாற்று பாடத்திட்டங்களில் கல்வி நிறுவனங்களில் பாரபட்ச மாறுபாடாண பிரச்சாரம் செய்யப்படுகிறது.

(5)பாடத்திட்டங்களின் அனைத்து அம்சங்களிலும் சமாதான கல்வி உட்பொதிக்கப்படல் - இலங்கையில் உள்ள பல்வேறு மத மரபுகள் அனைத்துமே மற்றவர்களுக்கு சேவை செய்வதுடன் சமாதானமான வாழ்வை எப்படி வாழ வேண்டும் என்பதற்கான முக்கியத்துவத்தை கற்பிக்கின்றன. இந்த கருப்பொருள் இளைஞர்களிடமும் ஒத்ததிர்வாகிறது, ஆனால் அவர்களது வளர்ப்புமுறை, ஒற்றுமையை எவ்வாறு ஆதரிப்பது மற்றும் ஒன்றாக இணைந்து செயல்படுவது என்பதை இயல்பிணைவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை.

காணாமல் போன இளைஞர்ககளின் குடும்பங்ளுக்கு இழப்பீடு:

காணாமல்போனோர் அலுவலகத்தின் நிறைவேற்றப்படாத சமாதான வாக்குறுதிகளால் இளைஞர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர், எனவே குறிப்பாக காணாமல்போன குடும்பங்களின் இளைஞர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். தகவல் உரிமை சட்டத்தில் குறிப்பாக இளைஞர்கள்ஆர்வம்காட்டுவதுடன் குழுக்கழாக சேர்ந்து பரிந்துரைகளுக்கன விவாதம் மற்றும் காணாமல் போனவர்களின் நிலை மற்றும் இழப்பீடு பற்றிய அரசாங்கத்தின் பதில்களைப் பெற வெளிப்பிரகரமாக செயல்படுகின்றனர். குறிப்பாக இளைஞர்கள் இந்த காரணத்திற்காக ஒன்றுதிரட்ட ப்படுகின்றனர், ஏனெனில் அவர்கள் நேசஉறவுகளை இழந்துள்ளனர். இன் நிலமை அவர்களின் குடும்பங்களுக்கு உறுதியற்ற சூழ்நிலையைக் கொண்டுவந்துள்ளது.

முடிவெடுத்தல் பற்றிய அணுகவும், விழிப்புணர்வும்:

சட்ட நடைமுறைகள், மசோதாக்கள் மற்றும் சட்டங்கள் பெரும்பாலும் இளைஞர்களின் வாழ்க்கையை பாதிக்கும் புதிய சீர்திருத்தங்களை ஆணையிடுகின்றன. தேசிய இளைஞர் சேவைகள் மண்றம் மற்றும் இளைஞர் பாராளுமன்றக் குழு ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட இளைஞர்களுக்கு கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பை வழங்குவதன் மூலம் அவர்களின் பார்வைக்கோணங்கள் அர்த்தமுள்ள வழிகளில் பிரதிபலிக்கப்ப ட்டு

பங்குபற்றுதல், பங்களித்தல் முலம் அவர்களை நோக்கி வரும் கொள்கைகளில் மற்றங்களை ஏற்படுத்தலாம்

உள்ளூர், மாகாண மற்றும் தேசிய தேர்தல், ஊழல் மற்றும் குற்றங்கள் ஆகியவற்றை கண்காணிப்பதன் மூலம் ஜனநாயக அமைப்புகளில் தங்கள் பங்கை மேம்படுத்த முடியும். இந்த அமைவுகளை அறிமுகப்படுத்துவது, அரசியல் சூழல் மற்றும் அதன் செல்வாக்கு, மற்றும் அதன் கடுமையான கட்டமைப்புகளை எவ்வாறு சிறப்பாக செய்ய முடியும் என்று புரிந்து கொள்ள உதவுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட, மற்றும் பொதுத்துறை ஊழியர்க ளுக்கு, பாலினம் மற்றும் சமாதானமுறையில் தேவையான உணர்திறன் பயிற்சிகளை வழங்க வேண்டும். இந்த இளைஞர்க ளும், இளைஞர் குழுக்களும் தமக்குள்ளும் தமக்கிடையிலும்நல்ல உறவுகளை வளர்ப்பதற்கும், மதிப்புமிக்க உள்ளீடுகளைப் புரிந்து கொள்வதற்கும் உதவும்.

தொழில் மற்றும் இணைவிதாண திறன்களை உருவாக்குதல்:

தேசிய முன்முயற்சிகள் இளைஞர்களை இலக்காகக் கொள்ளப்பட வேண்டும் மற்றும் அவர்களது திறமைகளை மேம்படுத்தவும் உதவ வேண்டும். சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் எவ்வாறு போதை பொருட்கள், வேலைவாய்ப்பின்மை, திறமை இல்லாமையுடன் ஒன்றிணைக்கப்படுகின்றன என்னும் விழிப்புணர்வை உருவாக்குவதற்காகவும், இளைஞர்கள் தங்கள் பங்கைப் காணும் விதத்திலும் இளைஞர்களின் பங்களிப்பைப் பற்றி மேலும் விவாதங்கள் நடைபெற வேண்டும்.

வெற்றிகரமான உள்ளூர் முயற்சிகளின் அதிகரிப்பு:

வெற்றிகரமான சமாதானமுயற்சிக் கருத்திட்டங்களை மேம்படுத்துதல் - நிதி மற்றும் செல்வாக்கின் மூலம் - குறிப்பாக மதநம்பிக்கை மற்றும் மதத் தலைவர்களை உள்ளடக்கி, வலுவான சமுக மட்டத்தில் தொடங்கி, பிராந்திய மற்றும் மாகாண மட்டங்களுக்கு மாற்றப்பட்ட நிலையில் இருந்து வர வேண்டும்.

சர்வதேசம்:

இளைஞர் அவையை சென்றடைதல் மற்றும் நிரூபிக்கப்பட்ட தரவு:

முறைசார் விரிவுரைகள் மற்றும் பேரணிகள் மூலம் அல்லாது இளையர்களை வலிமையும் செம்மையுமான விதத்தில் சென்றடையும் வண்ணம் ஏற்ற முயர்சிகளுக்கு சர்வதேச சமூக ஒத்தாசையும் உறுதுணையும் கொடுக்க வேண்டும்.வெகுஜன ஊடக முறைகள் சமூகத்தை கட்டியெழுப்பும் கருவிகளாக உபயோகிக்கப்பட்டு இளையர்களை தேடிச்சென்றடையும் வித்த்தில் உருவகிக்கலாம்.

சர்வதேச அமைப்பக்கள், தேசிய வல்லுநர்களுடன் கூட்டுசேர்ந்து பிரச்சனைகள் உள்ள வலயங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ள நிதி உதவிகள் வளங்க மற்றும் இளையர்களின் சமாதான முயற்சிகளை ஆடையாளம் காணும் செயற்பாடுகளில் பங்குபெற ஊக்கப்படுத்தப்படவேண்டும்

சர்வதேச சமாதானப்பணியாளர்கள் மற்றும் மத குருமார்களுடன் பணியாற்றுதல்:

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து மதத் தலைவர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் அதிகமான பிரிவினையை உருவாக்குவதற்கு பதிலாக வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் ஒருங்கிணைக்கும் செய்திகளை பகிர்ந்து கொள்ள ஊக்கப்படுத்த வேண்டும்.

தடைகளை கடந்து தொடர்புகொள்ளுதல் மற்றும் பின்னூட்ட வழிமுறைகளை உறுதிப்படுத்துதல்:

NGO-க்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் கருத்து பரிமாற்றங்கள் ஆகியவை இளைஞர்களில் சார்ந்தது இருப்பதற்கு ம் இளைஞர் சமுகத்தின் கவலைகள், கொள்கை விவாதங்களின் போது மறக்கப்படாமல் இருப்பதற்கும், தொடர்ச்சியாக உதவ வேண்டும்



AGENTS OF PEACE AND SECURITY

Around the world many young people are victims of cultural, direct, and structural violence and have themselves become carriers of that same violence, which often compels victims to repeat such trauma on others.





There is a strong tendency among politicians and researchers to see youth as a problem that is yet to be solved. However, many youth are peaceful and peace-builders. Youth are underestimated as positive agents of change and key actors in peace-building, both by policy-makers and academics. However, despite being equally affected by various forms of violence, many are stepping forward to act constructively towards building a culture of peace.

The United Nations Security Council adopted unanimously, on 9 December 2015, a ground-breaking resolution on Youth, Peace and Security which recognizes; "young people who play an important and positive role in the maintenance and promotion of international peace and security".

As part of a series of national consultations, The International Youth Alliance for Peace organized a consultation on Youth, Peace and Security in Batticaloa , Sri Lanka on 27 and 28 May 2017 in partnership with World Vision Lanka and the Youth, Peace and Security (YPS) network, supported by British Council Sri Lanka Active Citizens Programme, which is part of the global effort to bolster action on the United Nations Security Council Resolution 2250 that calls for a greater role for young people in strengthening peace and security to help reshape the role of youth in peace building in communities, countries, across the regions and worldwide for safer tomorrow.

The consultations will feed into a global progress study on the positive contribution of young people in peace building. This will be presented to the UN Secretary General and the Member States of the United Nations at the end of 2017. Youth selected from 18-29 years from various organizations were invited to attend the two days consultations. These consultations comprised of peer to peer discussions and experience sharing and many more.

International Youth Alliance for Peace is a youth-led organization that was founded to bring together a network of youth to work together towards Sustainable Social Development.

IYAP hope to inspire youth-led social movements in the peace building arena under the banner of Resolution 2250. "We need to do more to raise the voices and shine the spotlights on young people who are really advocating in this space" said President of IYAP Thirukumar Premakumar.

IYAP along with its partners and district committees organizes initiatives such youth in other districts as well. If you want to join IYAP email them on *iyapofficial@gmail.com* or follow them on *www.facebook.com/IYAP.org* for more details.

[7] Hello! Event. 2017. "Agents of peace and security." June 11.

Appendix 2[8]:



Two day consultation on Youth, Peace and Security held in Batticaloa





Around the world many young people are victims of cultural, direct, and structural violence and have themselves become carriers of that same violence, which often compels victims to repeat such trauma on others. There is a strong tendency among politicians and researchers to see youth as a problem that is yet to be solved. However, many youth are peaceful and peace-builders. Youth are underestimated as positive agents of change and key actors in peace-building, both by policy-makers and academics. However, despite being equally affected by various forms of violence, many are stepping forward to act constructively towards building a culture of peace.

The United Nations Security Council adopted unanimously, on December 9, 2015, a ground-breaking resolution on Youth, Peace and Security which recognizes; "young people who play an important and positive role in the maintenance and promotion of international peace and security".

As part of a series of national consultations, The International Youth Alliance for Peace organized a consultation on Youth, Peace and Security in Batticaloa , Sri Lanka on May 27 and 28 in partnership with World Vision Lanka &the Youth, Peace and Security (YPS) network, supported by British Council Sri Lanka Active Citizens Program, which is part of the global effort to bolster action on the United Nations Security Council Resolution 2250 that calls for a greater role for young people in strengthening peace and security to help reshape the role of youth in peace building in communities, countries, across the regions and worldwide for safer tomorrow.

The consultations will feed into a global progress study on the positive contribution of young people in peace building. This will be presented to the UN Secretary General and the Member States of the United Nations at the end of 2017. Youth selected from 18 to 29 years from various organizations were invited to attend the two days consultations. These consultations comprised of peer to peer discussions and experience sharing and many more.

International Youth Alliance for Peace is a youth-led organization that was founded to bring together a network of youth to work together towards Sustainable Social Development.

IYAP hopes to inspire youth-led social movements in the peace building arena under the banner of Resolution 2250. "We need to do more to raise the voices and shine the spotlights on young people who are really advocating in this space." – Thirukumar Premakumar, President, IYAP.





[8] Sunday Island. 2017. "Two day consultation on Youth, Peace and Security held in Batticaloa." June 11.